**REVISED**
செய்தி வெளியீடு எண்: 536 நாள் : 21.10.2014

பத்திரிக்கை செய்தி

மாநிலத்திலேயே மிக அதிக அளவான 202 மிமீ மழை திண்டுக்கல் மாவட்டம் பழனி மற்றும் கொடைக்கானல் பகுதிகளில் நேற்று (20.10.2014) பெய்தது. இதன் காரணமாக, பழனி கோட்டத்தில் ஒட்டன்சத்திரம் தாலுக்கா, மஞ்சநாயக்கன்பட்டி கிராமம் காளிப்பட்டியில் இன்று (21.10.2014) ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினைத் தொடர்ந்து, இரு குடும்பங்களைச் சேர்ந்த 10 நபர்கள் நல்லதங்காள் ஓடை மற்றும் கரசவாய்க்காலுக்கு இடையில் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கிக் கொண்டனர். திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் மற்றும் வருவாய்த்துறை அலுவலர்கள் மீட்புப் பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்வதற்காக சம்பவ இடத்திற்கு விரைந்தனர். தொடர்ந்து பெய்த அடைமழையின் காரணமாக உள்ளூர் தீயணைப்புத் துறையினரால் மீட்புப் பணிகளை விரைந்து மேற்கொள்ள இயலவில்லை என்பதால் மாநில அரசுக்கு இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

இத்தகவல் கிடைக்கப்பெற்றவுடன், மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் திரு ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் விமானப்படை ஹெலிகாப்டர் மற்றும் தேசிய பேரிடர் மீட்புக் குழுவின் உதவிகளைப் பெற்று மீட்புப் பணிகளை விரைவுப்படுத்த உத்தரவிட்டார். அதன்படி புதுதில்லியில் உள்ள விமானப்டை தலைமையிட அதிகாரிகள் மற்றும் கோயமுத்தூரில் உள்ள சூலூர் விமானப்படை அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு மீட்புப் பணிகளுக்காக

ஹெலிகாப்டர் உதவி கோரப்பட்டது. மேலும், அரக்கோணத்திலுள்ள தேசிய பேரிடர் மீட்பு குழுவின் உதவியும் கோரப்பட்டது. மாநில அரசின் கோரிக்கையினை ஏற்று அரக்கோணத்திலுள்ள தேசிய பேரிடர் மீட்புப் படையைச் சார்ந்த 40 நபர்கள் சாலை வழியாக திண்டுக்கல்லுக்கு விரைந்தனர். அதேசமயம், சூலூாரிலிருந்து பிற்பகல் 1.30 மணிக்கு புறப்பட்ட ஹெலிகாப்டர் சம்பவ இடத்திற்கு 2.20 மணிக்கு அடைந்து மீட்பு நடவடிக்கைகள் மேற்கொண்டது.

வெள்ளத்தில் சிக்கித் தவித்த 14 வயதுடைய வர்ஷிணி என்ற சிறுமி மற்றும் 16 வயதுடைய சூர்யா என்ற சிறுவன் உள்ளிட்ட 10 நபர்களும் பிற்பகல் 3.45 மணிக்கு பத்திரமாக மீட்கப்பட்டனர். மாவட்ட நிர்வாகத்தால் 108 ஆம்புலன்ஸ் மூலமாக வெள்ளத்தில் சிக்கிய நபர்கள் பழனி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள்தொடர்புத்துறை, சென்னை–9